பத்திரிக்கைச் செய்தி

மின் இணைப்பு வழங்க ரூ.4,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் மின்வாரிய வயர்மேனுக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திருமதி.ஆயிஷாபேகம், ராஜிவ்காந்தி நகர், அத்திப்பட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய வீட்டிற்கு ஒருமுனை மின்சார இணைப்பு வேண்டி விண்ணப்பித்திருந்தார். திரு.மதியழகன், வயர்மேன், மின் இணைப்பு விரைவாக தரவேண்டும் எனில் தனக்கு ரூ.4,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகர பிரிவு 1ல் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 09.05.2012 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.மதியழகன், வயர்மேன் லஞ்சபணம் ரூ.4,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 27.02.2026ந் - தேதி திரு.மதியழகன், வயர்மேன், அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.